பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | வைகாசி 15 | செவ்வாய்க்கிழமை | 28.05.2024 | அதிர்வு 301

## பொலிஸ் ரீ சேட்டுடன் வீட்டுக்குள் நுழைந்து நகைகள் கொள்ளை

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு மாவட்டம், நட்டாங்கண்டல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 06▶

# பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளியாகிய பின்பே முடிவு

### அதுவரை ரணில், சஜித், அநுர மூவரும் சம அளவில்; தமிழரசின் தீர்மானத்தை அறிவித்தார் சுமந்திரன்



(எஸ்.நிதர்ஷன்)

"ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளியாகிய பின்னரே எந்த வேட்பாளரை ஆதரிப்பது எனத் தமிழரசுக் கட்சி முடிவெடுக்கும். அதுவரையில், பிரதான வேட்பாளர்களான ரணில், சஜித், அநுர ஆகிய மூவரையும் சம அளவிலேயே பார்த்துச் செயற்படுவது என்று தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது."

- இவ்வாறு தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 06▶

## பொதுத்தேர்தலை இலக்குவைத்து நாடகமாடும் சுமந்திரன் – சிறீதரன்

### சுகாஷ் இப்படி விளாசல்



(எஸ்.நிதர்ஷன்)

"அடுத்த நாடாளுமன்றத் தேர்தலை இலக்கு வைத்து சுமந்திரனும் சிறீதரனும் தமிழரசுக் கட்சிக்குள் போடும் நாடகமே உட்கட்சிப் பிரச்சினையாக வெளித் தெரிகின்றது."

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஷ் 06▶



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் வரை வடக்கில் பங்கு பற்றிய நிகழ்வுகளை ஒட்டி, இரண்டு விடயங்களைக் குறிப்பிட வேண்டும் என்று நேற்று கோடிகாட்டியிருந்தேன் அல்லவா?

நல்லூரில் சட்டநாதர் கோயிலை அண்டி, புராதன காலத்து மந்திரிமனை இருப்பது நம் எல்லோருக்கும் தெரியும். அது புராதன மரபுச் சின்னமாக அறிவிக்கப்பட்டமையோடு சரி. அது அழிந்து விடாமல் பாதுகாப்பதற்கான உருப்படியான திட்டமோ, நடவடிக்கையோ, அதற்குரிய நிதி ஒதுக்கீடோ மேற்கொள்ளப்படுவதாக இல்லை. 06▶

# உலக வர்த்தக முதலீடுகளை இங்கு ஈர்ப்பது பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும்

## ருவன் விஜேவர்தன விளக்கம்



டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் தலைவர் எலோன் மஸ்க் போன்ற உலகப் புகழ்பெற்ற வர்த்தகர்களின் முதலீடுகளை ஈர்க்க முடிந்தால், அது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பாக அமையும் என காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.

“Starlink” போன்ற திட்டத்தில் இணைவதன் மூலம் நாட்டின் பின்னடைந்த பிரதேசங்களுக்கு இணைய வசதிகளை பிரச்சினையின்றி வழங்க முடியும் எனவும் சுற்றுலாத்துறை உட்பட பொருளாதாரத்திற்கு பயன்படும் பல துறைகளின் வளர்ச்சிக்கு இது உறுதுணையாக இருக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே ருவன் விஜயவர்தன இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ருவன் விஜேவர்தன – 10 ஆவது உலக நீர் மாநாடு இந்தோனேசியாவின் பாலி தீவில் கடந்த 18 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை நடைபெற்றது. இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடோடோவின் உத்தியோகபூர்வ அழைப்பின் பேரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட தூதுக்குழுவினர் இதில் கலந்துகொண்டனர். அந்த விஜயத்தின் போது, ஜனாதிபதி மற்றும் டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் தலைவர் எலோன் மஸ்க் ஆகியோருக்கு இடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது.

அதன்போது “Starlink” திட்டத்தை இலங்கையில் ஆரம்பிக்க வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். இத்திட்டம் இலங்கையில் ஆரம்பிக்கப்பட வேண்டுமாயின் ஜனாதிபதியின் ஆதரவு தேவை என எலோன் மஸ்க் தெரிவித்தார். இலங்கையில் இவ்வாறான செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு தேவையான அதிகபட்ச ஆதரவை வழங்குவதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு இந்த வருட இறுதியில் இலங்கைக்குத் தாம் வரவுள்ளார் எனஎலோன் மஸ்க் குறிப்பிட்டுள்ளார். உண்மையில், டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் தலைவர் எலோன் மஸ்க் போன்ற உலகப் புகழ்பெற்ற தொழிலதிபர்களின் முதலீடுகளை ஈர்க்க முடிந்தால், அது இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரிதும் உதவும்.

இவ்வாறானதொரு செயற்திட்டத்தை இலங்கையில் ஆரம்பிப்பதன் மூலம் இலங்கை முழு உலகிற்கும் திறக்கப்பட்டுள்ளது என்ற செய்தி உலகெங்கிலும் பரவும். இதன் மூலம் உலகின் கோடீஸ்வர வர்த்தகர்கள் இந்நாட்டிற்கு வருவதற்கான சந்தர்ப்பம் ஏற்படும் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

மேலும், “Starlink” போன்ற திட்டத்தில் இணைவதன் மூலம், நாட்டின் பின்னடைந்த பிரதேசங்களுக்கு எந்தச் சிக்கலும் இன்றி இணைய வசதிகளை வழங்க முடியும்.அது சுற்றுலாத் துறை உட்பட பொருளாதாரத்திற்குப் பயன்படும் பல துறைகளின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

பாடசாலை மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் சலுகைக் கட்டண முறைகளின் கீழ் இணைய வசதிகளை வழங்குவது குறித்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கவனம் செலுத்தியுள்ளார்.

எதிர்காலத்தில் SpaceX நிறுவனத்துடன் கலந்துரையாடவுள்ளார் என ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார். "Starlink" திட்டம் தற்போது உலகில் 99 நாடுகளில் பரவியுள்ளது. மாலைத்தீவு, இந்தோனேசியா போன்ற நாடுகளும் இந்தத் திட்டத்தைத் தொடங்கியுள்ளன.

வெளிநாட்டு முதலீடுகள் இலங்கைக்கு வரும்போது அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது இலங்கை அரசியலில் வழக்கமாகிவிட்டது. ஒரு விடயத்தை ஒருவர் வெற்றிகரமாகச் செய்யும்போது, அதற்கு தடைகளை ஏற்படுத்துவதும், அந்த முயற்சிகளுக்கு இடையூறு செய்வதும் அரசியலில் தொடர்ச்சியாக நடைபெறுகின்றது. ஆனால் இதுபோன்ற உலகப் புகழ்பெற்ற தொழிலதிபர்களை இந்த நாட்டுக்கு முதலீட்டாளர்களாக அழைப்பதை மக்கள் எதிர்க்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்” – என்றும் அவர் குறிப்பிட்டார்.

# வடக்கு - கிழக்கின் நிலை தொடர்பில் சஜித் கவலை

“2009 மே 18 இல் யுத்தம் நிறைவடைந்தது. யுத்தம் நிறைவடைந்து 15 வருடங்கள் கடந்துள்ள போதிலும், வடக்கு – கிழக்கின் நிலைமை குறித்து எம்மால் மகிழ்ச்சியடைய முடியாது.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 202 ஆவது கட்டமாக 1,177,000 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், திருகோணமலை, கோமரங்கடவல மகா வித்தியாலத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"யுத்தமொன்று முடிவடைந்த பின்னர் சமாதானத்தின் பலனைக் கூட சரிவர இச்சமூகம் பெறவில்லை. சமாதானத்தின் பலன்கள் சரியாக கிடைத்திருந்தால் இங்குள்ள பாடசாலைகள் கூட தேசிய பாடசாலைகளாக மாறியிருக்க வேண்டும்.

பெயர்ப் பலகையுடன் சுருங்கிய தேசிய பாடசாலைகளை இங்கு நாம் நாடவில்லை. ஆனால், இங்கு அவ்வாறான எதுவும் நடக்கவில்லை. இன்னும் கூட இப்பிரதேசங்களில் யுத்தத்தால் அழிந்து போன பாடசாலைகள் இருக்கின்றன. சமாதானம் ஏற்பட்டு 15 வருடங்களாகின்றன. யுத்தத்தை வெற்றி கொண்டதற்காக எத்தனை தடவை வாக்களித்தீர்கள்.



இன்னும் எமக்கு யுத்தத்தைக் காரணம் காட்ட முடியாது. இப்பிரதேச பாடசாலைக்கும் மாணவர்களுக்கும் நீதி நியாயம் நிலைநாட்டப்படவில்லை.

வாக்குறுதிகள்நிறைவேற்றப்படாதவரலாற்றில், அரசியலால் நம்பிக்கையிழந்து போயுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு தூய நம்பிக்கையை என்னால் மாத்திரமே வழங்க முடியும். வார்த்தையின் உண்மையான அர்த்தத்தில் நாம் மாத்திரமே எதிர்க்கட்சியாக இருந்து கொண்டு மக்களுக்கான சேவைகளை முன்னெடுக்கின்றோம்.” – என்றார்.

# சஜித் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் மாவட்டம் தோறும் ஜனாதிபதி காரியாலயங்கள்

## பொலனறுவையில் அவரே அறிவிப்பு



தாம் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டதும் 25 மாவட்டங்களிலும் ஜனாதிபதி காரியாலயங்கள் உருவாக்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் நடைபெற்ற கட்சிக் கூட்டமொன்றில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரதான ஜனாதிபதி செயலகத்தின் உப காரியாலயங்கள் மாவட்ட ரீதியில் நிறுவப்பட்டு மக்களுக்கு சேவை வழங்கப்படும் என அவர் உறுதியளித்துள்ளார்.

மக்கள் மாவட்ட ரீதியான காரியாலயங்களுக்குச் சென்று தங்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக்கொள்ளக் கூடிய ஓர் பொறிமுறைமை உருவாக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

வரலாற்றில் எந்தவொரு தலைவரும் எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு மக்களுக்கு சேவையாற்றியதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்க்கட்சியில் இருந்து கொண்டே தாம் மக்களுக்குச் சேவையாற்றத் தொடங்கி விட்டார் என சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

# தொடர் மழையால் மில்லகந்த பிரதேசம் வெள்ளப் பெருக்கு நிலையை எட்டியது!







களு கங்கையின் கிளை நதியான சிறு வெள்ளப் பெருக்கு நிலையை எட்டியுள்ளது என்று நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று மாலை 6 மணியளவில் குடா கங்கையின் நீர்மட்டம் 6.53 மீற்றராக உயர்ந்துள்ளது என்று திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது.

இது 8 மீற்றர் மட்டத்தை தாண்டினால் அது பாரிய வெள்ளப் பெருக்கு நிலை என்று நீர்ப்பாசனத் திணைக்களம் குறிப்பிடுகின்றது.

தற்போது பெய்து வரும் மழையுடன் மகுரு ஆற்றின் நீர்மட்டமும் அதிகரித்து வருகிறது என்று நீர்ப்பாசன திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இது தவிர, கிங் மற்றும் நில்வள ஆறுகளின் நீர மட்டமும் அதிகரித்து வருகிறது.

இதேவேளை, மழை பெய்வதால், பல்வேறு அணைகள் மற்றும் நீர்த்தேக்கங்களில் அதிக வான் கதவுகள் திறக்கப்படும் என்று நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர்ப்பாசன (நீரியல்) பணிப்பாளர் எஸ்.பி.சி. சுகீஸ்வர பண்டார தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அவர் –

தற்போது அனைத்துப் பாசன நீர்த்தேக்கங்களிலும் 80 சதவீத நீர் கொள்ளளவு உள்ளது. இது கணிசமான அளவு அதிக கொள்ளளவு எனவும் தெரிவித்தார்.

குருநாகல் மாவட்டத்தின் தெதுரு ஓயாவும் புத்தளம் மாவட்டத்தின் தப்போவ வெவவும் தற்போது கசிந்து வருகின்றன. தெதுரு ஓயாவின் நான்கு வான்கதவுகள் திறக்கப்பட்டு வினாடிக்கு 2800 கன அங்குல வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. அணை திறக்கப்பட்டு, வினாடிக்கு 800 கனஅங்குல தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது என்றார்.

நிலைமை தற்போது அதிக அபாயம் இல்லை என்றாலும், அதிக மழை பெய்தால், கூடுதல் வான் கதவுகள் திறக்கப்பட வேண்டும், இது தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்களுக்கு குறிப்பிடத்தக்க ஆபத்தை ஏற்படுத்தும் என்று மேலும் தெரிவித்துள்ளார்.

வினாடிக்கு 80 கன மீற்றர் வீதம் நீர் வெளியேற்றுவதற்காக குக்குலேகங்கை நீர் மின் தேக்கத்தின் வான்கதவுகளின் அதிகம் திறக்கப்பட்டுள்ளன. இதனால் புலத்சிங்கேலவின் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் மேலும் மோசமடையக்கூடும்.

தென்மேற்கு மாகாணங்களின் ஊடாக பாயும் களனி மற்றும் களு போன்ற ஆறுகளில் அதிக நீர்மட்டம் பதிவாகியுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# நாடு முழுவதிலும் மழை நிலைமை மேலும் தொடரும் சாத்தியக்கூறு!

## வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவிப்பு

தென்மேல் பருவப் பெயர்ச்சி நிலைமை காரணமாக நாடு முழுவதும் தற்போது நிலவும் மழை நிலைமையும் காற்று நிலைமையும் மேலும் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, இன்றும் மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களில் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று அந்த திணைக்களம் வெளியிட்டுள்ள புதிய வானிலை முன்னறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் நுவரெலியா மாவட்டத்திலும் சில இடங்களில் 75 மில்லி மீற்றர் வரை பலத்த மழை பெய்யக்கூடும்.

ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் மாலை அல்லது இரவு நேரங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும் வடக்கு, வடமத்திய, மேல், தெற்கு மற்றும் வடமேல் மாகாணங்க



ளிலும் திருகோணமலை மாவட்டத்திலும் காற்றானது மணித்தியாலத்துக்கு 50 முதல் 60 கிலோ மீற்றர் வேகத்தில் வீசக்கூடும்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் அவ்வப்போது 30 தொடக்கம் 40 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புலமைப்பரிசில் பரீட்சை விண்ணப்பங்கள் ஏற்பு



2024 ஆம் ஆண்டுக்கான தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் பணி நேற்று ஆரம்பமானதாகப் பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, 14 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி வரை நிகழ்நிலை மூலம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும்.

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை செப்டெம்பர் 15ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் பரீட்சை தொடர்பில் மேலதிக தகவலுக்கு www.onlineexams.gov.lk என்ற இணையதளத்தை அணுகலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

அத்தோடு, மேலதிக விவரங்களை 0112784537, 0112786616 அல்லது 1911 பரீட்சை திணைக்கள அவசர தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

# எச்சரிக்கையை மீறிக் கடலுக்குச் சென்ற இரண்டு மீனவர்களைக் காணவில்லை!

எச்சரிக்கையை மீறிக் கடலுக்குச் சென்ற இரண்டு மீனவர்களைக் காணவில்லை என்று கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தென்மேற்குப் பருவ மழை காரணமாக இலங்கை மீனவர்களுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கையையும் மீறி இந்த மீனவர்கள் கடலுக்குச் சென்றுள்ளனர் என்று கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, அதிக காற்று வீசி வருவதைக் கருத்தில் கொண்டு இன்றும் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறு மீனவ மற்றும் கடல்சார் சமூகத்தினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 24 மணித்தியாலங்களில் மேல், சப்ரகமுவ மாகாணங்களிலும் நுவரெலியா மாவட்டத்திலும் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம்




தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணித்தியாலங்களில் இரத்தினபுரியின் கரகல பிரதேசத்தில் அதிகளவாக 143.3 மி.மீ மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இதேவேளை, 7 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கிழக்குப் பட்டதாரி ஆசிரியர் நியமனங்களுக்கு கல்முனை மேல்நீதிமன்று இடைக்காலத் தடை

(கல்முனை நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் இன்று வழங்கப்படவிருந்த பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனம், கல்முனை மேல் நீதிமன்றத்தினால் நேற்று வழங்கப்பட்டுள்ள இடைக்கால தடை உத்தரவின் மூலம் தடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 5 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. அதுவரை நியமனம் எதுவும் வழங்க கூடாதென பிரதிவாதிகளுக்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

குரல்கள் இயக்க சட்டத்தரணிகள் நேற்று முன்தினம் முதல் மேற்கொண்ட அயராத முயற்சியினால் இந்த இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முன்னதாக –கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் வழங்கப்படவுள்ள பட்டதாரி ஆசிரியர் நியமனத்திற்கான தெரிவில் பெரும் முறைகேடுகள் இடம்பெற்றிருக்கின்றன எனத் தெரிவித்த கிழக்கிலங்கை முஸ்லிம் பேரவை, இதனை நிவர்த்தி செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் மகஜர் மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக பேரவையின் செயலாளர் செயிட் ஆஷிப் மேலும் தெரிவிக்கையில் –

கிழக்கு மாகாணத்தில் நிலவும் ஜி.சி.ஈ. உயர்தர பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்களுக்காக பட்டதாரிகளை ஆள்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை கடந்த மார்ச் மாதம் 30 ஆம் திகதி நடாத்தப்பட்டிருந்தது.

இப்பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைவாக குறித்த நியமனத்திற்கான நேர்முகப் பரீட்சை கடந்த வாரம் இடம்பெற்ற நிலையில், இதன் மூலம் நியமனத்திற்காக தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளின் பெயர்ப் பட்டியல் ஞாயிற்றுக்கிழமை கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டிருக்கிறது.

அத்துடன் இம்மாதம் 28ஆம் திகதி செவ்வாய் தொடக்கம் இவர்களுக்கான ஆசிரியர் நியமனம் வழங்கப்பட இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

எனினும் இத்தெரிவில் பாரிய முறைகேடுகள் இடம்பெற்றிருக்கின்றன எனவும், இதனால் தமக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பதாகவும் பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் கவலையடைந்துள்ளனர்.

குறித்த நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடாமல் நியமனத்திற்காக தெரிவு செய்யப்பட்டோரின் பெயர்ப் பட்டியல் மாத்திரமே வெளியிடப்பட்டிருக்கிறது. இவ்வாறு நியமனம் வழங்கும் முறையானது சட்டத்திற்கு முரணானது என்று – கிழக்கிலங்கை முஸ்லிம் பேரவையின் செயலாளர் சுட்டிக்காட்டியிருந்தார்.

அதேவேளை இம்முறைகேடு தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடுவதற்கும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்கும் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் குறித்த நியமனத்தில் அநீதியிழைக்கப்பட்டு, பாதிக்கப்பட்டிருப்பதாக கருதும் பட்டதாரிகள் அனைவரும் 0777497979 எனும் கையடக்கத் தொலைபேசி இலக்கத்துடன் தம்மை உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறும் சட்டத்தரணி எம்.எம்.ஆஸாத் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் இவ்விவகாரத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் கவனத்திற்கு கொண்டு வந்தமையுடன் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் குறித்த நேர்முகப் பரீட்சையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் குளறுபடிகள் தொடர்பாக ஆராய்ந்துள்ளார்.

இவற்றை நிவர்த்தி செய்து, பாதிக்கப்பட்ட பட்டதாரிகளையும் ஆசிரியர் நியமனத்தில் உள்வாங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று ஆளுநர் மற்றும் அதிகாரிகளை அவர் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டிருந்தார்.

இதற்கிடையில் –

இவ்விடயத்தை ஒட்டி கிழக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவின் சார்பில் அதன் செயலாளர் ஆ.மன்சூர் நேற்று "அனைத்துப் பரீசார்த்திகளுக்குமான அறிவித்தல்" என்ற பெயரில் ஓர் அறிவிப்பை வெளியிட்டுள்ளார். அதில் –

கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் மேற்குறித்த போட்டிப்பரீட்சையின் தரவு உள்ளீடு செய்யும் கணினி அமைப்பில் ஏற்பட்ட தவறு காரணமாக அந்த போட்டிப் பரீட்சை சம்பந்தமான மேல் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என்பதை பரீசார்த்திகள் அனைவருக்கும் தயவுடன் அறியத்தருகிறேன் என்றும் –

இந்த கணினி அமைப்பு மேம்படுத்தப்பட்ட பின்னர் இறுதித் தேர்வு பட்டியல் மற்றும் மொத்த புள்ளிகள் பட்டியல் கிழக்கு மாகாண இணையத்தளத்தில் வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் மேலும் தயவுடன் அறியத்தருகிறேன் என்றும் – தெரிவிக்கப்பட்டிருந்தது.

# தயாளன் இப்போதும் சாதனை!







யாழ்ப்பாணத்தின் மூத்த விளையாட்டு வீரரான முன்னாள் உடற்கல்வித் துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் சண். தயாளன், கொழும்பு சுகாதாஸ விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்தாவது மாஸ்டர்ஸ் மெய்வன்மைப் போட்டியில் தடியூன்றிப் பாய்தலில் புதிய சாதனை படைத்து தங்கப்பதக்கம் வென்றிருக்கின்றார்.

2019 ஆம் ஆண்டில் என்.டபிள்யூ.ஏ.சி.டி சில்வா 2.30 மீற்றர் பாய்ந்த உயரத்தைத் தாண்டி, 2.32 மீற்றர் உயரம் பாய்ந்து சாதனை படைத்திருக்கின்றார் பிரபல விளையாட்டு வீரரான தயாளன்.

பாடசாலைக் காலத்திலிருந்தே கிரிக்கெட், ஹொக்கி, உதைபந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் மற்றும் மெய்வன்மைத் துறைகளில் மாவட்ட மட்டம் தாண்டி, தேசிய மட்டத்தில் சாதனை படைத்து வந்த தயாளன், 1977 ஆம் ஆண்டில் ஆசிய விளையாட்டுக்களில் பங்கு பற்றிய இலங்கை இளைஞர் உதைபந்தாட்ட அணிக்கு தலைமை வகித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மெய்வன்மைத் துறையில் தடியூன்றிப் பாய்தல், ஈட்டி எறிதல், தட்டெறிதல், மரதன், 1,500 மீற்றர் மற்றும் 800 மீற்றர் ஓட்டங்கள் போன்றவற்றில் பாடசாலை காலத்திலிருந்து சாதனைகள் படைத்து வருபவர் அவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிரபல உதைபந்தாட்ட மத்தியஸ்தர், கிரிகெட் நடுவர், மெய்வன்மை மத்தியஸ்தர், தொடக்குநர், கூடைப்பந்தாட்ட மற்றும் ஹொக்கி மத்தியஸ்தர் போன்ற தகுதி நிலைகளை நிரூபித்து விளயாட்டுத்துறையில் பெரிதும் மதிக்கப்படும் தயாளன் சிறந்த விளயாட்டுத்துறை நிர்வாகியும் கூட.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சாதனை விளையாட்டு வீரரான அவர், தமது 65 ஆவது வயதில் தடியூன்றிப் பாய்தலில் சாதனை படைத்திருக்கின்றார்.

இப்போதும் கூட கூடைபந்தாட்டம், உதைபந்தாட்டம்,கிரிக்கெட் போன்ற துறைகளில் சளைக்காத வீரராக அவர் விளையாடி வருகின்றமையும் மத்தியஸ்தம் வகிக்கின்றமையும் குறிப்பிடத்தக்கவை.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்த மந்திரிமனையைப் பாதுகாப்பதற்காகத் தொடர்ந்து குரல் எழுப்புபவர்களில் அப்பிரதேசத்தைச் சேர்ந்தவரான வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் முக்கியமானவர்.

வடக்கே யாழ்ப்பாணம் வந்திருந்த ஜனாதிபதியுடன் இது குறித்து சுமந்திரன் எம்.பி. நேரடியாகப் பேசியிருக்கின்றார். பின்னர் சி.வி.கே.சிவஞானத்தை அழைத்து,இந்த விவகாரம் குறித்து அறிவதற்காக ஜனாதிபதி உங்களுடன் பேச விரும்புகின்றார், அவருடன் பேசுங்கள் என்று கூறி இருக்கிறார்.

அதன்படி சிவஞானம் ஜனாதிபதியைச் சந்தித்து அவருடன் இதுபற்றி கலந்துரையாடினார். மந்திரி மனையைப் பேணுவதற்கான மறுசீரமைப்புப் பணிக்குரிய நிதியை தமது ஜனாதிபதி செயலகம் ஊடாகவே ஒழுங்கு செய்து தருவார் என உறுதி கூறிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவரையும் அழைத்து, சிவஞானத்துடன் தொடர்புபடுத்தி விட்டிருக்கின்றார்.

பின்னர் சிவஞானத்துடன் இவ்விடயம் குறித்து உரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மந்திரிமனை சீரமைப்புக்கான நிதியை விடுவிக்கும் உத்தரவை ஜனாதிபதி ஏற்கனவே வழங்கிவிட்டார் என்ற தகவலை சிவஞானத்திடம் உறுதிப்படுத்தி இருக்கிறார்.

ஆக, சீரழிந்து செல்லும் மந்திரி மனை தப்பிப் பிழைக்கும் வாய்ப்புக் கிட்டி இருப்பதாக நம்பிக்கை பிறந்துள்ளது.

அடுத்த விடயம் சற்று வித்தியாசமானது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கில் பங்கு பற்றிய நிகழ்வுகளில் எல்லாம், மதகுருமாருக்கு மேடையிலேயே ஆசனங்கள் ஒதுக்கப்பட்டன. பௌத்த மத குருவுக்கு அவரது ஆசனத்தில் வெள்ளைத்துணி விரிக்கின்ற காரணத்தினால், அதே முறைமை ஏனைய மத குருமாருக்கும் வழங்கப்படுவது வழமை.

மாங்குளத்தில் ஜனாதிபதி பங்குபெறும் நிகழ்வுக்கு பௌத்த மதகுரு வரமாட்டார் என்ற தகவல் கடைசி நேரத்தில் அறிவிக்கப்பட்டது. அவ்வளவுதான். மேடையில் மதகுருமாருக்கு போடப்பட்ட ஆசனங்கள் எல்லாம் விரைந்து பார்வையாளர் பக்கத்திற்கு இறக்கப்பட்டு விட்டன. பௌத்த மத குரு இல்லாவிட்டால் ஏனைய மதங்களின் குருமாருக்கும் மேடையில் இடமில்லை என்பது ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் எழுதப்படாத ஒழுங்கு போலும்.

அது மாத்திரமல்ல, இன்னொரு கூத்தும் நடந்தது. பௌத்த மத குரு இல்லாத இடத்தில் மத குருமாருக்கான இருக்கையில் வெள்ளைத்துணி விரிக்கத் தேவையில்லை என்று கருதி அதனையும் ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவினர் வல்வந்தமாக அகற்றினர்.

எனினும், சுகாதார அமைச்சு ஊழியர்களான பெண்கள் இருவர், தங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட கட்டளை பிரகாரம், வரும் மதகுருமாருக்கு அவர்களின் இருக்கையில் விரிப்பதற்கு வெள்ளைத் துணிகளுடன் காத்திருந்தனர். பௌத்த மதகுரு இல்லாதமையால் வெள்ளைத் துணி விரிக்கத் தேவையில்லை என்று அந்தப் பெண் ஊழியர்களும் அதிகாரமிடுக்குக் கட்டளையிடப்பட்டதாம். ஆனால் சம்பந்தப்பட்ட பெண் ஊழியர்கள் உடனே தமது மேலதிகாரிகளான மாகாண சுகாதார அலுவலர்களிடம் முறையிட, அவர்கள் வந்து பக்கத்தில் நின்று, மௌலவியும், வண பிதாவும் அமருகின்ற ஆசனங்களுக்கு வெள்ளைத் துணி விரிக்கப்படுவதைப் உறுதிப்படுத்திக் கொண்டனர் என்று கூறப்பட்டது.

நாட்டில் பௌத்த சீலம் கொடிகட்டிப் பறக்கிறதுதான் பாருங்கோ....!

## பிரதான வேட்பாளர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போது மேற்கண்டவாறு கூறிய சுமந்திரன் எம்.பி., மேலும் தெரிவித்ததாவது:–

“ஜனாதிபதித் தேர்தல் குறித்து எங்களுடைய கட்சியின் மத்திய செயற்குழு கடந்த வாரம் கூடிப் பேசியபோது தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் உரிய நேரத்திலே அது சம்பந்தமான முடிவை நாங்கள் எடுப்பதாகவே தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

மேலும், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும்அனைத்துவேட்பாளர்களினதும்தேர்தல் அறிக்கைகளைப் பார்த்துவிட்டு அதன் பின்பு சரியான தீர்மானம் எடுக்கப்படும். இப்போது இருக்கின்றவர்களில் பிரதான வேட்பாளர்களாகக் கருதப்படும் ரணில், சஜித், அநுர என்ற மூவரையும் நாங்கள் இப்போது சம தூரத்தில் வைத்துப் பார்த்துச் செயற்படுவோம் என்று தீர்மானத்தை எடுத்திருக்கின்றோம்.

அப்படி அவர்களைச் சம தூரத்தில் வைத்து நாங்கள் செயற்படுவதாக இருந்தால் எந்தவொரு வேட்பாளர் நியமனத்தையும் நாங்கள் ஆதரிக்கவும் இல்லை. எதிர்க்கவும் இல்லை. அவர்கள் மூவரையும் ஒரே இடத்தில் ஒரே தூரத்தில் வைத்துத் தான் நாங்கள் செயற்படுவோம்.

குறிப்பாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணம் வந்தபோது அவரது கூட்டத்தில் பங்குபற்றியிருந்தேன். அதன் போதுஅவரோடும்பேசியிருந்தேன். ரணில் விக்கிரமசிங்க இங்கு வந்த போதும் கூட அரச நிகழ்வுகளிலே நாங்கள் பங்குபற்றியிருக்கின்றோம்.

ஆனாலும் ஜனாதிபதித் தேர்தல் வருகின்ற சூழ்நிலையிலும் எவரையும் நாங்கள் சந்திப்போம். குறிப்பாக சஜித் பிரேமதாஸ வடக்குக்கு வந்தால் அவரையும் சந்திப்போம். இவர்களைத் தவிர வேறு வேட்பாளர்கள் வந்தால் அவர்களையும் நாங்கள் சந்திப்போம்.

இப்படி அனைவரையும் சந்தித்துப் பொது வெளியிலே உரையாடி வெளிப்படைத் தன்மையோடு மக்களிடத்தே நாங்கள் நடாத்திய உரையாடல்களையும் தெரிவித்து மக்களுடன் கலந்தாலோசித்து சரியான தீர்மானத்தை நாங்கள் எடுப்போம் என்பதையும்உறுதியாகச்சொல்லிவைக்க விரும்புகிறோம்.” – என்றார்.

## பொலிஸ் ரீ சேட்டுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பகுதியில் நேற்று அதிகாலை வீட்டுக்குள் நுழைந்தவர்கள் கத்தி முனையில் நகைகளைக் கொள்ளையிட்ட சம்பவம் இடம் பெற்றுள்ளது.

நட்டாங்கண்டல் பகுதியில் உள்ள வீட்டுக்குள் நுழைந்த 5 பேர் கொண்ட குழு வீட்டில் இருந்தவர்களைக் கட்டி வைத்துவிட்டுப் பணம், நகைகளை எடுத்துத் தருமாறு மிரட்டியுள்ளனர்.

வீட்டின் ஜன்னலை உடைத்துக் கொண்டு உள்ளே சென்ற கொள்ளையர்களில் ஒருவர், வாசல் கதவைத் திறந்த பிற்பாடே மற்றையவர்கள் உள்நுழைந்தனர் என்று வீட்டு உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

வீட்டு உரிமையாளரின் 14 வயது மகனைக் கொலை செய்யப் போவதாக மிரட்டிய கொள்ளையர்கள், அந்தச் சிறுவனின் தாய், தந்தையின் கண்களை மூடிக் கட்டி விட்டு மகனை நகைகளை எடுத்துத் தருமாறு மிரட்டியுள்ளனர்.

கொள்ளையர்களில் ஒருவர் பொலிஸ் என அடையாளப்படுத்தப்பட்ட ரீ சேட் அணிந்து வந்திருந்தார் என்றும், வீட்டின் உரிமையாளரை விசாரிக்க வேண்டும் என்று தெரிவித்தே உள்நுழைந்தார் என்றும் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொள்ளையர்களால் வீட்டில் இருந்தவர்களின் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் எடுத்துச் செல்லப்பட்ட போதிலும், ஒரு மோட்டார் சைக்கிள் எரிபொருள் தீர்ந்த நிலையில் – கைவிடப்பட்ட நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

## பொதுத் தேர்தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தார்.

கடந்த 2005 ஆம் ஆண்டு ரணிலின் பயணத்துக்கு வடக்கு மக்கள் தடையாக இருந்திருக்கலாம் என்றும், அதை அவர்கள் வருத்தத்துடன் நினைவு கூர்வார்கள் என்றும் சுமந்திரன் தெரிவித்துள்ள கருத்து தமிழரசுக் கட்சியின் உத்தியோகபூர்வ நிலைப்பாடா என்றும் சுகாஷ் கேள்வி எழுப்பினார்.

இது தமிழரசுக் கட்சியின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு இல்லாவிட்டால் மேற்படி கருத்தை முன்வைத்த சுமந்திரனுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கச் சிறீதரன் தயாரா? என்றும் சுகாஷ் கேள்வி எழுப்பினார்.

VACANCY
For Website & YouTube Media
Male / Female
- VJ (Video Jockey)
- Photographer
- Graphic Designer
- Editor
- Typist - English & Tamil

Qualification -
Minimum 2 Years Experience
G.C.E. A/L or Relevant Media Qualifications
Fluency in Computer Knowledge
Send your CV to mail before you contact
CONTACT - 0777 739 185
Email - lankamedianews@gmail.com



# மஹிந்த - இந்தியத் தூதர் நேற்று சந்தித்துப் பேச்சு

இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்பானது விஜேராம மாவத்தையில் உள்ள மஹிந்த ராஜபக்ஷ வின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

புதிதாக நியமிக்கப்பட்ட இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, கடந்த பல தசாப்தங்களாகக் கொழும்புக்கு புது டில்லியின் நிலையான ஆதரவைப் பற்றி விவாதித்தார்.

இந்தியாவுடனான இலங்கையின் பழமையான உறவு மற்றும் நெருங்கிய நண்பர் மற்றும் அண்டை நாடாக கடந்த பல தசாப்தங்களாக இலங்கைக்கு இந்தியா அளித்துவரும் நிலையான ஆதரவு குறித்தும் விவாதித்தனர் என்று இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் தனது முந்தைய காலத்தை நினைவு கூர்ந்த சந்தோஷ் ஜா, இருதரப்பு நட்புறவையும் ஒத்துழைப்பையும் மேலும் வலுப்படுத்துவதற்காக மீண்டும் ஒருமுறை கொழும்பில் இருப்பதைத் தாம் பெரும் பாக்கியமாக கருதுகிறார் என்றும் கூறியுள்ளார்.



# 5 லட்சம் ரூபா வலம்புரிச் சங்கை விற்க முற்பட்ட மீனவர் கைதானார்

5 லட்சம் ரூபா பெறுமதியான வலம்புரிச் சங்கு ஒன்றை பேருவளை பிரதேசத்தில் உள்ள வர்த்தக குழுவொன்றுக்கு விற்பனை செய்ய முயன்ற மீனவர் ஒருவர் கட்டுநாயக்க பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயது மீனவர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த வலம்புரிச் சங்கைக் கொள்வனவு செய்யும் வர்த்தக குழு என்ற போர்வையில் சந்தேக நபரை கட்டுநாயக்க பிரதேசத்துக்கு வரவழைத்து இவ்வாறு கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவரது மீன்பிடி தொழிலில் பெரிதாக வருமானம் எதுவும் இல்லாத காரணத்தால் தன்னிடமிருந்த வலம்புரிச் சங்கை விற்பனை செய்ய முயன்றார் என்று விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை மினுவாங்கொடை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நீதித்துறைக்கு நீதி கிட்டுமா?

'தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியாகிவிடும்.'

இது நீதித்துறையின் மகா வாக்கியங்களில் ஒன்று.

நீதியைத் தாமதமின்றி வழங்க வேண்டும் என்ற வற்புறுத்தலுக்காக எழுந்த வாசகம் இது. ஆனால் இலங்கையில் காலத்தை இழுத்தடித்து, நீதியை மறுக்கும் பண்பியல்புதான் நீதித்துறையின் மாற்றவே முடியாத அடிப்படையாகிவிட்டது.

லட்சக்கணக்கில் பிணக்குகளும் வழக்குகளும். ஆனால் அவற்றை விசாரித்து முடிவுகட்ட வேண்டிய நீதிமன்றங்களுக்கும் நீதிபதிகளுக்கும் பற்றாக்குறை. இதனால் வழக்குகள் ஒவ்வொன்றும் தவணை, தவணை என்று போடப்பட்டு, காலம் இழுத்தடிக்கப்பட்டு, கடைசியில் நீதியும் செத்துவிடும் போக்கே இங்கு தொடர்ந்து அரங்கேறுகின்றது.

வழக்குக்கு நீதிமன்றத்தின் கதவை தட்டுவதும், காலத்தை வெறுமனே பறி கொடுப்பதும் ஒன்று என்றாகிவிட்ட நிலைமை.

நீதிபதிகள், நீதியரசர்கள் ஆளணி வெற்றிடங்களினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பவற்றில் மேனிலை நீதிமன்றங்களான உயர் நீதிமன்றமும் மேன்முறையீட்டு நீதிமன்றமும் முக்கியமானவை.

வழக்கமாக இலங்கையின் உயர் நீதிமன்றம் பிரதம நீதியரசர் உட்பட 11 நீதியரசர்களைக் கொண்டிருக்கும். அதேபோல மேன்முறையீட்டு நீதிமன்றமும், மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைமை நீதியரசர் உட்பட 19 நீதியரசர்களைக் கொண்டிருக்கும்.

இப்போது சில மாதங்களாக உயர் நீதிமன்றத்தில் இரண்டு நீதியரசர்களுக்கு வெற்றிடம் நீடிக்கின்றது. அதேபோல மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் ஐந்து நீதியரசர்களுக்கு வெற்றிடம் உள்ளது.

தாம் பரிந்துரைக்கும் நீதியரசர்கள் எல்லோரையும் அரசமைப்புக்கு கவுன்ஸில் கண்ணை மூடிக்கொண்டு அங்கீகரித்து நியமனம் வழங்காமல, கேள்வி எழுப்புகின்றது என்று சீற்றமுற்றிருக்கும் ஜனாதிபதி, அதன் காரணமாக நீதியரசர்கள் நியமனங்களைச் செய்யாமல் நீண்ட காலம் இழுத்தடித்து வருகிறார்.

இந்தப் பிணக்கின் காரணமாக எழுந்த வழக்கு உயர் நீதிமன்றத்திற்குச் சென்றுள்ள நிலையில், பிரதம நீதியரசர் தவிர ஏனைய உயர்நீதிமன்ற நீதியரசர் பதவிகளுக்கு புதிய நியமனங்களைப் பரிந்துரைத்து நியமிக்க ஜனாதிபதிக்கு இடைக்காலத் தடை உத்தரவு விதித்திருக்கின்றது உயர்நீதிமன்றம்.

இந்தப் பின்புலத்தில் -

இப்படி நீதியரசர்கள் நியமனம் செய்யப்படாமையினால் வழக்குகள் விசாரிக்கப்படாமல், நீதிகோரும் மக்களும், அவர்களுக்காக வழக்காடும் சட்டத்தரணிகளும் பெரும் நெருக்கடியையும் அநீதியையும் எதிர்கொள்கின்றனர் என்று தெரிவித்து, மூத்த சட்டத்தரணி ஒருவர் உயர்நீதிமன்றத்தில் இப்போது அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்திருக்கின்றார்.

சுமார் 55 வருடங்களுக்கு மேல் சட்டத்தரணியாகப் பணிபுரியும் ஜனாதிபதி சட்டத்தரணி சேனக வலகம்பாய இந்த வழக்கைத் தாக்கல் செய்திருக்கிறார்.

இந்த நியமனங்கள் செய்யப்படாமல் காலம் இழுத்தடிக்கப்படுகின்றமையால் மேல் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராகும் வாய்ப்புகளை இழந்து, அதன் காரணமாக அடுத்த வருடங்களுக்குரிய பணிவாய்ப்பையும் பறிகொடுத்து, நேரத்துடனேயே ஓய்வு பெறும் கட்டாயத்துக்கு தள்ளப்படுகின்றனர் என்றும் -

அதே நெருக்கடி மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக இருந்து உயர்நீதிமன்றத்திற்கு நீதியரசராகப் பதவி உயர்வு பெறக் காத்திருப்பவருக்கும் உள்ளது என்றும் - சுட்டிக்காட்டப்படுகின்றது.

உயர்நீதிமன்ற நீதியரசர்கள், மேல்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் மற்றும் மேல் நீதிமன்ற நீதிபதிகளின் பதவி ஓய்வு கால வயது எல்லை முறையே 65, 63 மற்றும் 62 ஆகும். உரிய காலத்தில் பதவி உயர்வுக்கு வாய்ப்பு இருந்தும், ஜனாதிபதிக்கும் அரசமைப்புக் கவுன்ஸிலுக்கும் இடையிலான இழுபறி காரணமாக நியமனங்கள் தாமதமடைவதால், அடுத்த மேனிலை நீதிமன்றத்திற்குப் பதவி உயர்வு பெறாமல் பலமுன்னணி நீதித்துறைச்சேவையாளர்கள் முன்கூட்டியே ஓய்வு பெறும் துர்ப்பாக்கியம் - அவலம் - நேருவதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இந்தப் பிரச்சினையில் உயர் நீதிமன்றம் தலையிட்டு தீர்வு தருமா? நீதி தேவைக்குத்தான் வெளிச்சம்...!

# கரையைக் கடந்தது ‘ரீமால்’ புயல்: இந்தியாவில் கனமழை வாய்ப்பு

வங்கக்கடலில் நிலவிய “ரீமால்” புயல் மேற்கு வங்கத்தின் சாகர் தீவுகள் – வங்கதேசத்தின் கெப்புபாரா இடையே கரையைக் கடந்துள்ளது.

புயல் கரையைக் கடந்திருந்தாலும் மேற்கு வங்க தலைநகர் கொல்கத்தாவில் கனமழை தொடர்கிறது. மேற்கு வங்கம் மட்டும் அல்லாது அசாம், மேகலாயாவில் கனமழை தொடரும் என இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

புயலால் மேற்கு வங்கத்தில் மரங்கள் முறிந்து விழந்தது, மின் கம்பங்கள் சாய்ந்தது, குடிசை வீடுகள் தரைமட்டமானது எனப் பல்வேறு சம்பவங்கள் மேற்கு வங்கத்தில் நடந்துள்ளன. பிபிர் பாகன் பகுதியில் சுவர் இடிந்து விழுந்து ஒருவர் படுகாயமடைந்துள்ளார். கொசாபா பகுதியில் புயல் காற்றில் தூக்கி வீசப்பட்ட குப்பைகளால் ஒருவர் காயமடைந்துள்ளார்.

புயலால் மேற்கு வங்கத்தின் தென் பகுதியில் குறிப்பாக கொல்கத்தாவில் ரயில், விமான, வீதிப் போக்குவரத்து என அனைத்தும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மேற்கு வங்கத்தில் பரவலாக கன மழை பெய்து வருகிறது. கொல்கத்தாவில் பலத்த காற்று, மழைக்கு



இடையே மாநகராட்சி, மின் வாரியத் துறை எனப் பலதுறைகளும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளன. முன்னதாக நேற்று முன்தினம் மேற்கு வங்கத்தில் 1 லட்சம் பேர் பத்திரமான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர். பல்வேறு நிவாரண முகாம்களில் அவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

# வைகோவுக்கு எலும்பு முறிவு



ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவுக்கு தோளில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது.

குமரி மாவட்ட ம.தி.மு.க. செயலாளர் வெற்றிவேல் மகள் திருமண விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பங்கேற்பதற்காக கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ நெல்லை சென்றார்.

அங்கு பெருமாள்புரத்தில் உள்ள தனது சகோதரர் ரவிச்சந்திரன் வீட்டில் தங்கியிருந்தபோது, திடீரென கால் இடறி கீழே விழுந்ததில் வைகோவுக்கு வலது தோளில் லேசான எலும்பு முறிவுஏற்பட்டுள்ளது.

மருத்துவர்கள் அறிவுறுத்தலின்படி அவர் மேல்சிகிச்சைக்காக சென்னைக்கு புறப்பட்டார்.

தூத்துக்குடியில் இருந்து விமானம் மூலம் சென்னைக்கு சென்ற வைகோ, அண்ணா நகரில் உள்ள அவரது வீட்டில் ஓய்வெடுத்து வருகிறார். அவரது உடல்நிலையை மருத்துவர்கள் கண்காணித்து வருகின்றனர். இன்று அவருக்கு சிறிய அறுவைசிகிச்சை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ம.தி.மு.க. முதன்மைச் செயலாளர் துரை வைகோ தனது எக்ஸ் வலைதள பக்கத்தில்,

“சிறிய அறுவை சிகிச்சைக்குப் பிறகு வைகோ விரைவில் முழுமையாக குணமடைவார். அச்சம் கொள்ளும் வகையில் வேறுஎதுவும் இல்லை” என தெரிவித்துள்ளார்.

வைகோ முழுமையாக குணமடைய வேண்டும் என்று பா.ம.க. தலைவர் அன்புமணி தனது சமூக வலைதள பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

# முல்லை பெரியாறு அணையை இடிக்கும் முயற்சி: கேரள மாநில அரசுக்கு பன்னீர்செல்வம் கண்டனம்

முல்லை பெரியாறு அணையை இடிக்கும் கேரள அரசின் முயற்சிக்கு முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“தென் தமிழக மக்களின் உயிர்நாடியாக விளங்கும் முல்லைப் பெரியாறு அணையை இடித்துவிட்டு, புதிய அணையை கட்டிக் கொள்வதற்கான சுற்றுச்சூழல் தாக்கம் குறித்த மதிப்பீட்டினை ஆராய்ச்சி செய்வதற்கான ஆய்வு வரம்புகளை நிர்ணயம் செய்யுமாறு, மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தை கேரள அரசு கேட்டுள்ளது.

அதனடிப்படையில் கேரள அரசின் கருத்துரு சுற்றுச்சூழல் வல்லுநர் மதிப்பீட்டுக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி இந்தக் கருத்துரு வல்லுநர் மதிப்பீட்டுக் குழுவினால் மே 28ஆம் திகதி ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள இருப்பதாகவும் வெளிவந்துள்ள செய்தி பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பழைய அணையை இடிக்கவும், புதிய அணையை கட்டவும் மத்தியஅரசை அணுகியிருப்பது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் செயலாகும்.

கேரள அரசின் இதுபோன்ற நடவடிக்கை என்பது முல்லைப் பெரியாறு அணையை அண்மித்துள்ள தமிழகத்தின் பல மாவட்டங்களை பாலைவனமாக்கும் செயலாகும். கேரள



அரசின் நடவடிக்கை ஜனவரி மாதமே தி.மு.க. அரசுக்கு தெரியவந்தும், மக்களவை தேர்தலை முன்னிட்டு மறைக்கப்பட்டதாக வெளியான செய்தி வேதனை அளிக்கிறது. அரசியல் ஆதாயத்திற்காக இதை செய்துவிட்டு, தற்போது மத்திய அரசுக்கு முதல்வர் கடிதம் எழுதுவது தும்பைவிட்டு வாலைப் பிடிக்கும் செயலாகும்.

இந்தக் கடிதத்தை ஜனவரி மாதமே எழுதியிருந்தால் சுற்றுச்சூழல் வல்லுநர் மதிப்பீட்டுக் குழுவின் பரிசீலனைக்கே இப்பிரச்சினை சென்றிருக்காது. கேரள அரசின் முயற்சியை இனிமேலாவது முதல்வர்தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.”– என்று வலியுறுத்தியுள்ளார்.



# பாகிஸ்தானில் பஸ்ஸை வழிமறித்து தீ வைத்த தீவிரவாதிகள்; பயணிகளுக்கும் அச்சுறுத்தல்

பாகிஸ்தானில் பஸ் ஒன்றை வழிமறித்து அதில் பயணித்த பயணிகளை அச்சுறுத்தி அந்த பஸ்ஸுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது.

தெஹ்ரீக்-இ தாலிபான் பாகிஸ்தான் அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகளே இவ்வாறு செய்துள்ளனர்.

இந்த சம்பவமானது நேற்று முன்தினம் கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் இடம்பெற்றுள்ளது.

கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் திராசிண்டாவிலிருந்து தேரா இஸ்மாயில் கானுக்குச் செல்லும் பஸ்ஸை தரபன் தெஹ்சில் என்ற இடத்தில் தடுத்து நிறுத்திய தீவிரவாதிகள், பயணிகளை வலுக்கட்டாயமாக இறக்கி அரசாங்கத்துக்கு ஆதரவாக உள்ளனர் என கூறி சித்திரவதை செய்துள்ளனர்.

இதையடுத்து, பஸ்ஸை தீவைத்து எரித்து சாம்பலாக்கிய பின் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளனர்.

இந்த நிலையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

மேலும், பகைபர் பக்துன்க்வா மாகாணத்தின் தெற்கு மாவட்டங்களில் சட்டம் ஒழுங்கு மிகவும் சீர்குலைந்து கொந்தளிப்பான சூழல் நிலவுவதால் தீவிரவாதிகளின் ஆதிக்கம் அப்பகுதியில் அதிகரிக்கத் தொடங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பசிபிக் பெருங்கடல் தீவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்




பசிபிக் பெருங்கடலின் தெற்கே ஓசியானியாப் பகுதியில் அமைந்துள்ள வனுவாட்டு தீவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.4 ஆக பதிவாகியுள்ளது.

மேற்படி தகவலை ஐரோப்பிய மத்திய தரைக்கடல் நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கமானது வனுவாட்டு தீவின் தலைநகரான போர்ட் விலாவிற்கு வடமேற்கு பகுதியில் இருந்து 83 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கடல் பகுதியில் மையம் கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், நிலநடுக்கம் சுமார் 29 கிலோமீட்டர் ஆழத்தில் ஏற்பட்டுள்ளதுடன் சுனாமி தொடர்பிலான எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மட்டு. கல்லடி பாலத்திற்கு அருகில் தோணா பகுதியை அத்துமீறிக் கைப்பற்ற எடுத்த நடவடிக்கை முறியடிப்பு






(பழுவூரான்)

மட்டக்களப்பு கல்லடிப் பாலத்திற்கு அருகில் உள்ள தோனாப் பகுதியினை அத்துமீறிய வகையில் கைப்பற்ற முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கை முறியடிக்கப்பட்டது. இந்தப் பகுதியை அபகரிப்பதற்காகச் சிலர் தொடர்ச்சியான முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் ஒரு குழுவினர் அந்தப் பகுதியில் பாதுகாப்புக் கமராக்களைப் பூட்டி, அப்பகுதியில் வேலிகள் இடும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தனர்.

இது தொடர்பில் கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

இதையடுத்து அந்த இடத்திற்குச் சென்ற அவர்கள் இருவரும் மட்டக்களப்பு மாநகர சபையின் உதவியுடன் அந்தப் பகுதியில் முன்னெடுக்கப்படும் காணி அபகரிப்பைத் தடுத்து நிறுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்தனர்.

அங்கு காணிகளை அடைப்பதற்காக கொண்டு வரப்பட்ட பொருள்கள் மற்றும் பாதுகாப்பு கமராக்கள் அகற்றப்பட்டு மாநகர சபையின் வாகனங்களில் ஏற்றப்பட்டு மாநகரசபைக்கு கொண்டு செல்லப்பட்டன.

இது தொடர்பில் காத்தான்குடி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அங்கு வந்த காத்தான்குடி பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தக் காணி தொடர்பான வழக்கு மட்டக்களப்பு நீதிமன்றங்களில் நடைபெற்று வரும் நிலையில் இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாக அங்கு தெரிவிக்கப்பட்டது.

இது, மட்டக்களப்பு பிரதேசத்தில் ஏற்படும் வெள்ள நிலைமைகளின் போது வெள்ள நீர் வழிந்தோடுவதற்கான பிரதான பகுதியாக காணப்படுவதுடன், அது அடைக்கப்படுமானால் கல்லடி தொடக்கம் காத்தான்குடி வரையான பகுதி வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலத்தில் இந்த பகுதியை அடைப்பதற்கு முன்னெடுக்கப்பட்ட பல முயற்சிகள் தடுத்து நிறுத்தப்பட்ட நிலையில் மீண்டும் முயற்சி முன்னெடுக்கப்படுவதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# திருவடிநிலையில் கடற்படைக்கு காணி சுவீகரிக்க முயற்சி தடுத்து நிறுத்த அணி திரளும்படி சபா குகதாஸ் அழைப்பு!

(எஸ்.நிதர்ஷன்)

சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட திருவடி நிலையில் கடற்படைக்கு காணி சுவீகரிக்க முயற்சி எனத் தெரிவித்துள்ள வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் இதனைத் தடுத்து நிறுத்த அனைவரும் அணிதிரள வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

சங்கானைப் பிரதேச செயலக எல்லைக்குள் J/172 J/174 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் கடற்படையினர் வைத்திருக்கும் தங்கள் முகாமை நிரந்தரமாக அமைப்பதற்கு நில அளவைத் திணைக்களத்தின் உதவியுடன் தனியார் காணிகளை அளவீடு செய்வதற்கு எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 9 மணிக்கு வருகை தரவுள்ளனர்.



இந்த சுவீகரிப்பு நடவடிக்கைகளை தடுக்க காணிகளுக்கு சொந்தமான பத்திரங்களை வைத்திருக்கும் இக் காணிகளின் உரிமையாளர்கள் அன்றையதினம் வருகைதர வேண்டும்.

இங்கு சுவீகரிக்க தயாராகும் பகுதி மத அடையாளங்களையும், அதன் புனித தீர்த்த பகுதிகளையும், மக்களின் இறந்த உடலங்களை எரிக்கும் சுடுகாடுகளையும், மீன்படித் தொழிலை செய்வோருக்கான கடலோரத்தையும், சுற்றுலாப் பயணிகளின் பொழுதுபோக்குக்கான பிரதேசமாகவும் தனியார் காணிகளை கொண்டிருப்பதாலும் அங்கு கடற்படை முகாம்களை நிரந்தரமாக அமைப்பது ஏற்புடையதல்ல.

எனவே இக் காணிகளின் உரிமையாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் அன்றையதினம் வருகை தந்து காணி சுவீகரிப்பை தடுத்து நிறுத்த வேண்டும் என அவர் கோரியுள்ளார்.

# கொடிகாமம் மிருசுவில் பகுதியில் பஸ்ஸில் இருந்து விழுந்தவர் படுகாயம்



யாழ்ப்பாணம் கொடிகாமம் மிருசுவில் பகுதியில் பஸ்ஸில் இருந்து விழுந்த ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபை பஸ்ஸில் பயணித்த ஒருவரே இவ்வாறு விழுந்து காயமடைந்தார். தொலைபேசியில் யாரோ ஒருவருடன் இந்த நபர் சத்தமாக பேசிக்கொண்டிருந்தார் எனவும் அச்சமயமே அவர் விழுந்திருக்கலாம் எனவும் சம்பவ சமயம் அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர்.

காயமடைந்தவர் கொடிகாமம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# கிழக்கு ஆளுநரின் திட்டத்தில் கல்முனை கடற்கரை சுத்திகரிப்பு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமானின் “தூய்மையான கடற்கரை” கருத் திட்டத்துக்கு அமைவாகக் கல்முனை மாநகர சபையால் கடற்கரைப் பிரதேசம் சுத்திகரிப்பு செய்யப்பட்டு வருகின்றது.

கிழக்கு மாகாணத்தில் உள்ள கடற்கரைப் பிரதேசங்களைச் சுத்தப்படுத்தித் தூய்மையாக்கி அழகுபடுத்தும் பொருட்டு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் கருத் திட்டத்துக்கு அமைவாக கல்முனை மாநகர சபை ஒழுங்கு செய்திருந்த கடற்கரை சுத்திகரிப்பு வேலைத் திட்டம் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி தலைமையில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.

மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.எச்.ஜெளஸி, வேலைகள் அத்தியட்சகர் வி.உதயகுமரன் ஆகியோரின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந்தப் பணிகளில் சுகாதார மற்றும் பொறியியல் வேலைப் பிரிவுகளின் மேற்பார்வையாளர்களும் ஊழியர்களும் பங்கேற்றனர்.





# கல்முனை சிறுவர் பூங்காவையும் கடலரிப்புக் கபளீகரம் செய்யும்?





(எம்.என்.எம்.அப்ராஸ்)

அம்பாறை மாவட்டம் கல்முனை பிரதேசத்தில் கடலரிப்பின் வேகம் மீண்டும் அதிகரித்துள்ளதால் பொது மக்கள் பொழுது போக்கிற்காக ஒன்றுகூடும் கல்முனை கடற்கரை சிறுவர் பூங்கா என அழைக்கப்படும் பகுதி பாதிப்புக்குள்ளாகி வருகின்றதை அவதானிக்க முடிகின்றது.

கடற்கரை சிறுவர் பூங்காவில் காணப்படும் தடுப்பு சுவரின் ஒரு பகுதி கடலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளது.

மேலும் கடலரிப்பு அதிகரிக்குமிடத்து பூரணமாக தடுப்பு சுவர் விழும் நிலையில் காணப்படுகிறது. அங்கு அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களும்,அருகில் உள்ள மீனவர் ஓய்வு அறைக் கட்டடமும் மீன்பிடி வாடிகளும் பாதிப்புக்குள்ளாகும் நிலையில் காணப்படுகின்றன.

மேலும் கடலரிப்பு காரணமாக கடலுக்குள் காணப்படும் கட்டட இடிபாடுகள் காரணமாக மீனவர்கள் – குறிப்பாக கரைவலை மீன்பிடியில் இடுபடும் மீனவர்கள் – மிகவும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே,தற்போதைய நிலையை கருத்திற்கொண்டு கடற்கரை சிறுவர் பூங்காவை அண்டிய பிரதேசங்களைப் பாதுகாக்க உரியவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென எனவும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.











# அம்பாறையிலும் மார்ச் 12 இயக்கத்தின் மக்கள் மேடை நிகழ்வு கடந்த ஞாயிறன்று

தூய்மையான அரசியலுக்காக ஒன்றிணைவோம் எனும் தொனிப் பொருளில் அம்பாறை மாவட்ட மார்ச் 12 இயக்கத்துடன் பவ்ரல் இயக்கம் இணைந்து ஏற்பாடு செய்த மக்கள் மேடை நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை காரைதீவு பாபா ரோயல்ஸ் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

மார்ச் 12 இயக்கத்தின் அம்பாறை மாவட்ட தலைவர் கந்தையா சத்திய நாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர், அரசியல் கட்சி மற்றும் பொது சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் என 153 பேர் கலந்து கொண்டனர்.

முன்னதாக மார்ச் 12 இயக்கத்தின் தோற்றம், செயற்பாடு தொடர்பாக காணொலி காண்பிக்க பட்டது.

அம்பாறை மாவட்ட தரவுகள் தொடர்பாக பவ்ரல் இயக்கத்தின் நிகழ்ச்சி திட்ட இணைப்பாளர் இஷத் இன்காம் உரையாற்றினார்.

நிகழ்ச்சிதொடர்பாக சொர்ணலிங்கம் சந்திரசிறி ஆகியோர் விளக்கவுரை நிகழ்த்தினரகள்.

இதன்போது அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் திலக் ராஜபக்ஷ, காரைதீவு முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், கட்சிப் பிரதிநிதிகள் மூவர் கலந்து கொண்டு கருத்துரைத்தனர்.

பொதுமக்கள் பிரதிநிதிகளும் கேள்விகள் தொடுத்தனர். அதற்கு அரசியல் பிரமுகர்கள் பதிலளித்தனர்.

மார்ச் 12 இயக்கத்தின் மாவட்ட பிரதிநிதி வி.ரி.சகாதேவராஜா நிகழ்வை நெறிப்படுத்தி தொகுத்து வழங்கினார்.

அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுத்திருந்தும் மாவட்டத்தின் ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

சில கட்சிப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள்.

இதன்போது அம்பாறை மாவட்ட சிங்கள, தமிழ், முஸ்லிம் பிரதேசம் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள், சவால்கள் குறித்து பிரதிநிதிகள் பேசினார்கள். மக்களும் பேசினார்கள்.

குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் எரியும் பிரச்சனையான கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம் தொடர்பாகவும் பேசப்பட்டது.















# சு.க. தலைமையகத்தை கோட்டை விட்ட மைத்திரி தரப்பு புதிய இடம் தேடுகிறதாம்






தற்போதைய அரசியல் சூழ் நிலையை கருத்திற் கொண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்கால செயற்பாடுகளை வேறு இடத்தில் இருந்து முன்னெடுப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தரப்பு தீர்மானித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

அதன் படி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகம் அன்றி, எதிர்கால அரசியல் நடவடிக்கைகளுக்கு கொழும்பில் உள்ள மற்றுமொரு இடம் பயன்படுத்தப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

மேலும், இது தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் குழு கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு, மருதானை டார்லி வீதியில் உள்ள தலைமையலுவலகம் சந்திரிகா – நிமால் சிறிபால டி சில்வா அணியின் கட்டுப்பாட்டில் உள்ள நிலைமையிலேயே மைத்திரியின் தரப்பு பிறிதொரு இடத்திலிருந்து இயங்க முடிவு செய்துள்ளது.

தற்போது நிலவும் அரசியல் நெருக்கடி மற்றும் நீதிமன்ற தீர்ப்புகள் காரணமாக அரசியல் விவகாரங்கள் மற்றும் தொகுதிகள், மாவட்ட அமைப்பாளர்களை நிரந்தரமாக கூட்ட முடியாத நிலை மைத்திரி தரப்புக்கி ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில் சுதந்திரக் கட்சியின் மைத்திரிபால சிறிசேன அணி கட்சியின் அரசியல் செயற்பாடுகளை வேறொரு இடத்தில் இருந்து முன்னெடுப்பதே பொருத்தமானது என முடிவு செய்திருக்கின்றது எனக் கூறப்பட்டது.

இதன்படி, புதிய அரசியல் நிலையமொன்றை ஆரம்பித்து, அரசியல் விவகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக நாடளாவிய ரீதியில் உள்ள மாவட்ட, தொகுதி அமைப்பாளர்களை கொழும்புக்கு வரவழைக்க மைத்திரி அணி முடிவு செய்துள்ளது.

# கிழக்கில் விவசாயத்தை மேம்படுத்துவதற்கு உழவு இயந்திரங்களை வழங்கிய ஆளுநர்



(நூருல் ஹுதா உமர் )

கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் திண்மக் கழிவுகளை அகற்றவும் விவசாயத்தை மேம்படுத்தவும் ஆளுநர் செந்தில் தொண்டமானால் இயந்திரங்கள் மற்றும் உழவு இயந்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.



இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்நாயக்க, ஆளுநரின் செயலாளர் எல்.பி. மதநாயக்க, உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் என். மணிவண்ணன், விவசாய அமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜீ. முத்துபண்டா, பேரவை செயலாளர் ஏ.எல்.எம். பாயிஸ் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



# வவுனியா மாவட்டத்தில் 123 தொழுநோயாளர்கள்

## தொற்று நோயியல் வைத்திய அதிகாரி தெரிவிப்பு

(கே.வசந்தன்)

வவுனியா மாவட்டத்தில் இது வரை 123 தொழுநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனத் தொற்று நோயியல் வைத்திய அதிகாரி சுஜானி தெரிவித்தார்.

நேற்று வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் தொழுநோய் தொடர்பாக இடம்பெற்ற விழிப்புணர்வு கருத்தரங்கின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில் -

வவுனியா மாவட்டத்தில் இதுவரை 123 தொழுநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும், இதில் செட்டிகுளம் பிரதேசத்தில் அதகமாக 69 தொழு நோயாளர்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிட்டார்.

இதன்போது தொழுநோய் தொற்றும் முறை மற்றும் அதன் அறிகுறிகள், அதற்கான மருத்துவ உதவிகள் போன்ற விடயங்களையும் அவர் தெரிவித்திருந்தார்.

இக்கருத்தரங்கில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



# மட்டக்களப்பில் கிணற்றுக்குள்ளிருந்து காயங்களுடன் ஆணின் சடலம் மீட்பு!



(பழுவூரான்)

மட்டக்களப்பில் நேற்றுத் திங்கட்கிழமை கிணற்றிலிருந்து ஆணொருவரின் சடலம் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளது.

வெல்லாவெளிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்டூர்ப் பகுதியைச் சேர்ந்த 59 வயதுடைய நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். களுவாஞ்சிகுடி நீதிவான் சடலத்தைப் பார்வையிட்டமையுடன், பிரேத பரிசோதனைக்காக சடலத்தை அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.



# பிரிட்டனில் இருந்து நாடு கடத்தப்பட்ட இலங்கைத் தமிழர் ஒருவர் உயிரிழந்தார்

பிரிட்டனில் இருந்து நாடு கடத்தப்பட்ட இலங்கைத் தமிழர் ஒருவர் இலங்கையில் உயிரிந்துள்ளார்.

அவர் பிரிட்டன் திரும்பலாம் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. எனினும் உள்துறைச் செயலகம் ஏற்படுத்திய தாமதம் காரணமாக அவர் பிரிட்டன் செல்வதில் தடங்கல் ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில் அவர் சுய நினைவு இழந்த நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதும் உயிரிழந்துள்ளார்.

நாடு கடத்தப்பட்ட இலங்கைத் தமிழரான சுதர்சன் (வயது-41), 2019ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 24ஆம் திகதி, பிரிட்டனில் இருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார்.

சட்டவிரோதமாக நிறுவனம் ஒன்றில் பணி புரிந்தார் என்றும் போலி ஆவணங்களைப் பயன்படுத்தினார் என்பதையும் அவர் ஒப்புக் கொண்டமையை அடுத்து அவர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டிருந்தார்.

தனது மனைவி, மகன்,மகள் ஆகியோரைப் பிரிந்தே அவர் இலங்கையில் வாழ்ந்து வந்துள்ளார்.

இந்த நிலையில், கடந்த ஆண்டு, அதாவது, 2023ஆம் ஆண்டு, நவம்பர் மாதம், புலம்பெயர்தல் தீர்ப்பாயம் ஒன்று சுதர்சன் பிரிட்டன் திரும்பலாம் என்று தீர்ப்பளித்திருந்தது.

எனினும், உள்துறைச் செயலகம், சுதர்சன் பிரிட்டன் திரும்புவதற்கான விசா நடைமுறைகளைப் பல மாதங்களாகத் தாமதப்படுத்தி வந்துள்ளது என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பின்னர் மனித உரிமைகள் சட்டத்தரணியான நாக. கந்தையா உள்துறை அலுவலகத்தின் தாமதத்துக்கு எதிராக நடவடிக்கைகளை ஆரம்பித்ததன் பின்னர், இந்த மாத ஆரம்பத்தில் சுதர்சன் பிரிட்டன் திரும்புவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தது.

இந்த நிலையில், இலங்கையில் அவர் தங்கியிருந்த வீட்டில் சுயநினைவிழந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

## கரடியனாறு பிராந்திய விவசாய ஆராய்ச்சி நிலைய
# காவலாளி மீது போதையில் வந்த கும்பல் தாக்குதல்

(பழுவூரான்)

கரடியனாறு பிராந்திய விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் இரவு நேரக் காவலாளியாகக் கடமையாற்றும் அனந்தசைனு (வயது 32) கடந்த சனிக்கிழமை இரவு நேரக் கடமையில் இருந்த சமயம் போதைப் பொருளுக்கு அடிமையான ஒரு கும்பலினால் வாள் வெட்டுக்கு இலக்காகிய நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் அனைத்து உத்தியோகத்தர்களையும் அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது.

இந்நிலையில் வாள்வெட்டு கும்பல் கைது செய்யப்படும் வரை பணிப் புறக்கணிப்பில் ஈடுபட கரடியனாறு விவசாய திணைக்கள அரச உத்தியோகத்தர்கள் தரப்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஊடகங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.



# சுமார் ஐந்து கோடி ரூபா பெறுமதியுடைய 2 கிலோ ஹெரோயினுடன் ஒருவர் கைது!

சுமார் ஐந்து கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என களுத்துறை குற்றத்தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, பாணந்துறை - வலபால பிரதேசத்தில் உள்ள வீதியொன்றுக்கு அருகில் இந்தச்க் கைது இடம்பெற்றுள்ளது.

இதன்போது சந்தேகநபரிடம் இருந்து



சுமார் இரண்டு கிலோ ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் டுபாயில் பதுங்கி இருந்து போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வருபவர் எனக் கூறப்படும் டுபாய் தரங்காவின் முக்கிய சகா என காவல்துறை விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பாணந்துறை வலோபால பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர் பாணந்துறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

# இன்றைய ராசி பலன்கள் - 28.05.2024




இன்று வளர்ச்சி காணப்படும் நாள். உங்கள் சுய முயற்சி மூலம் கடினமாக உழைத்து வெற்றி பெறுவீர்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சூழ்நிலையை திறமையாக கையாண்டு சவால்களை சமாளிக்க வேண்டும். சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்காது.

உங்கள் துணையுடன் நல்லுறவு கொண்டு மகிழ் வீர்கள். உங்கள் அணுகுமுறை உங்கள் பிரியமான வரின் பாராட்டைப் பெறும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படுகின்றது. நீங்கள் கணிசமாக சேமிப்பீர்கள்.

கால் வலி மற்றும் தொடை வலி தவிர வேறு எந்த ஆரோக்கியப் பிரச்சினையும் இருக்காது. என்றாலும் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.




இன்று விவேகத்துடன் யோசித்து செயல்பட வேண்டும். கடந்த காலத்தைப் பற்றிய யோசனையைத் தவிர்க்க வேண்டும். சாதகமற்ற சூழ்நிலையையும் சமாளித்து அதனை உங்களுக்கு சாதகமாக ஆக் கிக் கொள்ளுங்கள்.

நீங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம். எனவே திட்டமிட்டு பணியாற்றுங்கள். அதிகரிக்கும் பணிச்சுமை காரணமாக வேறு வேலை தேடுவீர்கள்.

இன்று நீங்கள் காதலை எளிதாக எடுத்துக்கொள் வீர்கள். இதனால் உங்கள் துணையுடன் சுமுகமான உறவு காணப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமானதாக இருக்காது. கூடுதல் செலவினங்களை சந்திக்க நேரலாம்.

இன்று ஆரோக்கியம் சாதரணமாக இருக்கும். என்றாலும், ஆரோக்கியத்தில் சில அசௌகரியங்கள் உங்கள் வளர்ச்சியை பாதிக்கும்.




இன்று உங்கள் திறமையை வெளிப் படுத்தி வெற்றி பெறுவீர்கள். சிறப்புடன் செயலாற்ற மனதில் தெளிவு தேவை.

உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள். அவர்களிட மிருந்து தக்க சமயத்தில் ஆதரவு கிடைக் கப்பெறுவீர்கள். அதன் மூலம் வளர்ச்சி காண்பீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள். உங்கள் துணை யுடன் அன்பான தருணங்களை கழிப்பதன் மூலம் மன நிறைவைக் காண்பீர்கள்.

இன்று நிதி விஷயங்களுக்கு சாதகமான நாள். உங்கள் சேமிப்பு உயர்வதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ள நாள்.

தொடைகளில் விறைப்புத் தன்மை ஏற்பட வாய்ப்புள்ளது. யோகா மேற்கொள்வதன் மூலம் பலன் கிடைக்கும்.




கடகம்

இன்று உங்கள் செயல்களில் மிகுந்த அக்கறை காட்ட மாட்டீர்கள். அதிர்ஷ்ட-த்தை நம்பாமல் சிறந்ததை செயலாற்ற முயலுங்கள்.

பணியில் திருப்திகரமான நிலை இருக்காது. உங்கள் சக பணியாளர்களுடன் சுமுகமான உறவு காணப்படாது. தேவையற்ற பேச்சுகளைத் தவிர்க்கவும்.

இன்று காதலுக்கு ஏற்ற நாள் அல்ல. உங்கள் உணர்வு களை பகிர்ந்து கொள்ள முடியாவிட்டால் பொறுமை இழக்காதீர்கள். இனி வரும் நாட்கள் சிறந்த நாட்களாக இருக்கும் என்று நம்புங்கள்.

நிதி விஷயங்களுக்கு இன்று சிறந்த நாளாக இல் லாத காரணத்தால் உங்களிடம் உள்ள பணத்தை வைத்து சமாளிக்க வேண்டும்.




உங்கள் முடிவுகளை செயலாற்று வதில் உறுதியாக இருப்பீர்கள், மன தில் உள்ள குழப்பத்தை நீக்கி விடுங் கள். உங்கள் முடிவுகளை, கவனமாக திட்டமிட்டு செயலாற்றுவது நன்மை தரும்.

உங்கள் பணிக்கான பாராட்டைப் பெறுவீர்கள். உங்கள் செயல்திறன் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

இன்று நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் இருக்க வேண்டும். உங்கள் துணையை மகிழ்விக்க முயற்சி செய்யுங்கள்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. இன்று அதிர்ஷ்டமான நிதிநிலைமை இருக்காது. அது உங்க ளுக்கு கவலையாக இருக்கும்.

மனதில் காணப்படும் உற்சாகம் காரணமாக ஆரோக் கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று சிறப்பான நாள். உங்களின் மனநிலையை சிறப்பாக பராமரித்து தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர் கள்.

உங்கள் பணியில் வெற்றி கிடைக் கும். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உறவில் நல்லிணக்கம் காணப்படும். உங்கள் துணை யுடன் உங்கள் உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர் கள்.

இன்று பண வரவு சீராக இருக்கும். பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் காணப்படாது.




உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப் படும். அதற்கான நற்பெயர் பெறுவீர் கள். உங்கள் பணியில் மாறுதல்கள் நேரலாம்.

இன்று பணிகள் அதிகமாக இருக்கும். நீங்கள் பணியில் மும்மரமாக செயல்படுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீ காரம் பெறுவீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள். உங்களின் சிறந்த உணர்வுகளை உங்கள் துணையுடன் பகிர்ந்து கொள் வீர்கள்.

நிதி சம்பந்தமான பிரச்சினைகள் பாதிப்பை ஏற் படுத்தாது. நீங்கள் பணத்தை சேமிப்பீர்கள்.

ஆரோக்கியத்தில் சிறிது கவனம் தேவை. கால் வலி யால் அவதிப்பட நேரும்.




இன்று சில அசௌகரியங்கள் காணப்படும். உங்கள் ஆக்கப்பூர்வமான செயல்பாட்டை பாதிக்கும் பதட்டத்தை கைவிடுங்கள்.

இலக்குகளை அடைவதற்கும் வெற்றியைப் பெறுவதற்கும் முறையாக திட்டமிடவேண்டியது அவசியம்.

திருமண திட்டங்கள் பற்றிய உரையாடல்களை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப்போடுங்கள். இன்று காதலுக்கு ஏற்ற நாள் அல்ல.

பணத்தை கவனமாக கையாள வேண்டும். பண இழப்பு அல்லது பணம் திருடு போகலாம்.

உங்கள் தாயின் உடல் நிலை பற்றி கவலைப்படு வீர்கள். அந்த வகையில் செலவுகள் ஏற்படலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 28.05.2024

## தனுசு

இன்று சிறந்த நாளாக இருக்காது. அசௌகரியங்கள் காணப்படும். புதிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பணியில் பதவி உயர்வு கிடைக்க வாய்ப்பு உள்ளது. பணியில் உங்கள் நேர்மை பாராட்டைப் பெறும்.

உங்கள் துணையுடன் தேவையற்ற மோதல்கள் ஏற்படலாம். அவசர முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமானதாக இல்லை. தேவையற்ற செலவுகளை கண்காணிக்கவும்.

இன்று அஜீரணம் மற்றும் வயிற்று உப்பசம் போன்ற பாதிப்புகள் ஏற்படலாம். உண்ணும் உணவில் கவனம் கொள்ளுங்கள்.

## கும்பம்

விரக்தியான மன நிலையை தவிர்த்துவிட்டு மனதை மகிழ்ச்சியாக, அமைதியாக வைத்துக்கொள்ளுங்கள்.

பணியில் கூடுதல் சுமைகள் காணப்படும். பணியிடச் சூழல் மகிழ்ச்சியை அளிக்காது.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் துணையுடன் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று பண வளர்ச்சி குறைந்து காணப்படும். பணம் சேமிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

பதட்டம் மற்றும் பாதுகாப்பின்மியை தவிர்த்திடுங்கள். அது உங்கள் ஆரோக்கியத்தைக் கெடுக்கும்.

## மகரம்

இன்றைய நாள் ஏற்ற இறக்கங்களுடன் காணப்படும். திறம்பட அறிந்து உங்கள் செயல்களை ஆற்ற வேண்டும். தியானம் மேற்கொள்வது பயனுள்ளதாக இருக்கும்.

இன்று பணியில் வெற்றி காண்பீர்கள். சிறந்த வாய்ப்புகள் கிடைக்கும்.அதனை சரியாகப் பயன்படுத்துவதன் மூலம் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையிலான உறவில் நல்ல பிணைப்பு காணப்படுகின்றது.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். கூடுதல் பொறுப்புகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

தேக ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். இதனால் சிறந்த ஆரோக்கியம் பராமரிக்கப்படும்.

## மீனம்

முன்னுரிமைப்படி செயல்களை செய்வதற்கு மனதில் தெளிவு கொள்ளுங்கள். விழிப்புணர்வுடன் செயல்களைச் செய்து வளர்ச்சி காண்பீர்கள்.

பணியில் புதிய வாய்ப்புகள் உற்சாகத்தை அளிக்கும். உங்கள் பணிகளை விரைந்து ஆற்றுவீர்கள்.

நெருங்கிய உறவினர் ஒருவரிடமிருந்து உங்களுக்கு பயனுள்ள ஆலோசனை கிடைக்கும். அது உங்கள் தாய் அல்லது தந்தையாகக் கூட இருக்கலாம். அதன் மூலம் உங்களுக்கு பலன் கிடைக்கும்.

நிதி விஷயங்கள் இன்று சிறப்பாக காணப்படும். உங்களால் சேமிக்க இயலும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சனை காணப்படாது. இன்றைய நாளை நீங்கள் மகிழ்ச்சியாக அனுபவிக்கலாம்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES · KELSEY HOMES 40 Years Housing Excellence

+94 777 546 546 +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA

No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park

வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.


info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581

077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park · Npcpark · northernpcpark · Northern PC Park



# இலங்கையில் வெயின் கிராஃபைட் வளம் முதலீடுகளைச் செய்ய பல நாடுகள் போட்டி

இலங்கையில் உயர்தர வெயின் வளம் அதிகளவில் உள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கிராஃபைட் என்பது கார்பன் தனிமத்தின் படிக வடிவமாகும். இது கிராபெனின் அடுக்கப்பட்ட அடுக்குகளைக் கொண்டுள்ளது. இலங்கையில் இதன் இயற்கைப் படிவுகள் நிலத்தின் கீழ் உயர்தரத்தில் இருக்கின்றன எனக் கூறப்படுகின்றது.

சீனா, அமெரிக்கா, இந்தியா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் இந்தக் கிராஃபைட்டுகளுக்காக முதலீடுகளைப் பெறுவதற்குப் போட்டியிடுகின்றன. கனேடிய மற்றும் ஆஸ்திரேலிய நிறுவனங்களும் இதில் அதிக ஆர்வம் காட்டியுள்ளன.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கைவிடப்பட்ட குழிகள் காணப்படுகின்றன என்றும் இவை தோண்டப்பட்டதன் நோக்கம் தொடர்பிலும் ஆராயப்பட்டு வருகின்றது.


இலங்கையின் மூலோபாய சொத்துக்கள் மற்றும் வளங்கள் மீதான உலகளாவிய கவனத்துக்கு மற்றொரு எடுத்துக்காட்டு இது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிபுணர்களின் கூற்றுப்படி, இலங்கையில் உயர்தர வெயின் கிராஃபைட் வளமான படிவுகளில் உள்ளமை உறுதியாகியுள்ளது.

புவியியல் மற்றும் சுரங்க ஆய்வுப் பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ரஞ்சித் பிரேமசிறி இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் –

இலங்கையில் தற்போது இந்தத் துறையில் ஆர்வமுள்ள வெளிநாட்டு முதலீட்டாளர்களில் இந்தியா மற்றும் சீனாவைச் சேர்ந்த நிறுவனங்கள் உள்ளன.

அதிகபட்ச மதிப்பு கூட்டலை யார் செய்கிறார்கள் மற்றும் மேம்பட்ட தொழில்துறை பயன்பாடுகளுக்கு இதை யார் பயன்படுத்துகிறார்கள் என்பதை நாம் பார்க்க வேண்டும். – என்றார்.




சமீபத்தில், நாட்டில் கிராஃபைட் தொழில்துறையை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளைக் காண இந்திய அரசு மற்றும் பணியகத்தின் அதிகாரிகளுக்கு இடையே ஒரு ஆரம்ப கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

கலந்துரையாடலின் போது, இலங்கையில் கிராஃபைட் படிவுகளை ஆராய்வதற்காக மேம்பட்ட வான்வழி புவி இயற்பியல் ஆய்வு நுட்பங்களைப் பயன்படுத்துதல் போன்ற ஆய்வு மற்றும் சுரங்க தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதில் ஒத்துழைப்பது முக்கியமாக விவாதிக்கப்பட்டது.

நவீன தொழில்களில் பயன்படுத்த கிராஃபைட்டின் அதிகபட்ச மதிப்பு கூட்டல் மற்றும் ஈ.வி. பற்றரிகள் மற்றும் லூப்ரிகண்டுகள் (உராய்வு நீக்கிகள்) போன்ற கிராஃபைட் அடிப்படையிலான தொழில்களை தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து இரு சாராரும் பரிசீலித்துள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது.